Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.CC.68/2017 PW-3**

Name : செல்வம்
Father / Husband name : ராஜாராம்
Village : பாண்டிச்சேரி
Age : 58
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 09.06.2025

**Accused 1, 2 appearance dispensed with. Both side counsel present.**

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது எண்ணெய்க்கடை வைத்துள்ளேன். அ.சா.1 மங்கை என்பவரை எனக்கு தெரியாது. அ.சா.2 சங்கர் எனது மாமா. 1வது எதிரி தேவராஜ் எனது மாமா. 2 வது எதிரி வைதேகி எனது மாமி. இந்த வழக்கு சம்மந்தமாக எந்தவித விவரமும் தெரியாது. மங்கை என்பவரை நான் பார்த்தது இல்லை. தேவராஜ், மங்கை வழக்கு என்று தெரியும். போலிசார் இந்த வழக்கு சமமந்தமாக வேறு எந்த விவரமும் தெரியாது. தேவராஜ் சிவில் நீதிமன்றத்தில் வழக்கு கொடுத்துள்ளாரா என்று தெரியாது, அவர் என்னிடம் அதைப்பற்றி என்னிடம் சொல்லமாட்டார். போலிசார் வழக்கு சம்மந்தமாக என்னை விசாரிக்கவில்லை.

**( அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவித்து கு.வி செய்ய அனுமதி கேட்டதின் பெயரில் கு.வி செய்ய அனுமதி அளிக்கப்படுகிறது )**

இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார் உங்களை விசாரித்தார்கள் என்றும் விசாரணையின்போது தேவராஜ் என்பவருக்கும் மங்கை என்பவருக்கும் 25 ஆண்டுகளாக வழக்கு நடக்கிறது என்றும், மங்கை என்பவரின் 25 சென்ட் நிலத்தை தேவராஜ் ஏமாற்றி உள்ளளதா அவர் உங்களிடம கூறியுளார் என்றும், நீதிமன்றத்தில் வழக்கு இரண்டு முறை தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்றும், அது தொடர்பாக மேல்முறையீடு உள்ளது என்றும், போலிசார் விசாரணையில்

சொல்லிவிட்டு தற்போது எதிரிகள் உங்கள் உறவினர்கள் என்பதால் வழக்கு பற்றி தெரியாது என்று அரசு தரப்பு சாட்சியத்திலிருந்து விலகி எதிரிகளுக்கு ஆதரவாக பொய்யான சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

இல்லை.

/ திறந்த நீதி மன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால்
தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அதை தட்டச்சரால் தட்டச்சு
செய்யப்பட்டு பின்பு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு
அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என்
முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண். 1, திண்டிவனம்.